போக்குவரத்து உண்டு. ஆகவே, அப்பேர்ப்பட்ட வியாபார ஸ்தலம் என்ற முக்கியத்துவத்தை அனுசரித்து, அங்கே ஒரு அணை கட்டாவிட்டாலும், ஒரு "காஸ்வே" ஐயாவது கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அணை கட்டுவது பற்றி கேள்வி கேட்டதால், ஒன்றுமில்லை என்று பதிலளித்தேன். முக்கூடலில் "காஸ்வே" கட்டுவது சம்மந்தமாக ஒரு ப்ரொபோசல், 1956-ல் கொண்டுவரப்பட்டது ; அது டிஸ்ட்ரிக்ட் போர்ட் வேலையானதால், அது பரிசீலனையில் இருக்கிறது. டிவிஷனல் என்ஜினியர் (ஹைவேஸ் அண்ட் டிஸைன்ஸ்) இப்பொழுது பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்.

SRI D. S. AUTHIMOOLAM : இப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவில் மேற்குப் பகுதியில் உள்ள அம்பாசமுத்திரம், திருநெல்வேலி தாலூகாக்கள் மேல்ச்செவல் என்ற இடத்தில் காஸ்வே கட்டவேண்டுமென்று தவறுதலாக சீப் என்ஜினியர் சிபாரிசு செய்திருந்தார்கள். அது சம்மந்தமாக மகஜர்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன, அதை ரத்துசெய்து, அதை முக்கூடலில் கட்ட வேண்டுமென்று. அது சம்மந்தமாக சர்க்கார் தீவிரமாக பரிசீலனை செய்ய முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தனிக்கேள்வி போடவேண்டும்.

MR. SPEAKER : கனம் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் இல்லாததால், அவர்கள் சம்பந்தப்பட்ட 318, 319 கேள்விகளை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். அடுத்த கேள்வி, 320.

Poramboke lands

* 320 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹரிஜனங்கள் குடியிருந்துவரும் நத்தம் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The procedure prescribed in the Board's Standing Orders is followed in the matter of assignment of house-sites to Harijans, who are in occupation of house-sites in Natham porambokes. The Government have instructed all Collectors to take action in all cases of Harijan Nathams in the enjoyment of the caste Hindus, assign the sites to the Harijans, if the sites can be proved as lands at the disposal of the Government and if not, propose their acquisition for assignment to the Harijan occupants.

SRI P. G. MANICKAM : ஸார், மேற்கண்ட ஊர் நத்தமானது, ஹரிஜனங்களுக்குப் பட்டா செய்துக் கொடுக்காமல் இருப்பதால், அதை அவர்கள் பூரணமாக அனுபவிக்க முடியாமல்

இருக்கிறார்கள். அங்கே மரங்கள் இருந்தால், அவர்கள் பொது நலத்திற்கும் அனுபவிக்க முடியவில்லை; ஊர் நத்தம் என்ற முறையில், சர்க்கார் அதிகாரிகள் வேறு உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். ஆகவே, ஹரிஜனங்கள் குடியிருக்கும் ஊர் நத்தத்தை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படிப்பட்ட முயற்சி பற்றித்தான் முன்னே சொன்னேன், ஹரிஜன நத்தத்தில் காஸ்ட் ஹிந்துக்களுக்குச் சொந்தமாக இருந்தாலும் அப்படியில்லாமல், வேறு யாருக்காவது சொந்தமாக இருந்தாலும் அதை அக்வயர் பண்ணிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. K. SOMASUNDARAM: சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் ஹரிஜனங்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று இரண்டு மூன்று வருஷங்களாக கேட்டுக்கொண்டிருந்தும் காலதாமதமாகிறது. அதைச் சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்பொழுது கொஞ்ச காலமாக தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அதிகப்படியான சிப்பந்திகளைப் போட்டு துரிதமாக வேலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI P. G. MANICKAM: ஊர் நத்தத்திலுள்ள இடங்களில் மரங்கள் இருக்கின்றன. அந்த இடங்கள் ஜாதி ஹிந்துக்கள் தங்களுடையது என்கிறார்கள். அந்த மரங்களை சர்க்காருடைய மரங்களாகக் கருதி அந்த மரங்களை ஹரிஜனங்கள் சொந்தமாக அனுபவிக்க ஒரு நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் மேற்கொள்ளுமா? அதைப்பற்றி ஜில்லா கலெக்டர்களுக்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: பட்டா கொடுத்து விட்டால் பட்டா மூலமாக என்னென்ன உரிமைகள் உண்டோ அவைகள் எல்லாவற்றையும் அனுபவிக்கலாம்.

SRI N. MARUDACHALAM: ஊர் நத்தம் புறம்போக்கில் ஹரிஜனங்கள் குடியிருந்து வருகிறார்கள். அதன் பக்கத்தில் நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அந்த நிலச்சொந்தக்காரர்கள் ஹரிஜனங்களை அந்த இடங்களைவிட்டு வெளியேற்றுவதற்கு மணியக்காரர்களின் அனுமதி பெற்று வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். அப்படி முயற்சி செய்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படிப்பட்ட பிரயத்தனம் இருந்தால் அதைப்பற்றி முறையிட்டால் அதற்கு என்ன ஆவன செய்யவேண்டுமோ அதைச் செய்வார்கள்.

20th August 1960]

Sri T. T. Daniel : Whereas the policy of the State Government is to assign these poramboke lands where Harijans are residing in favour of the Harijans, will the Government consider the feasibility of extending the same policy to the transferred territory where the poramboke lands are given on the basis of lease alone?

The Hon. Sri M. A. Manickavelu : That can also be looked into.

Sri A. Vedarathnam : நத்தம் என்பது குடியிருப்புக்கு என்று ஏற்பட்ட நிலம்தானே. அப்படி இருக்கும்போது குடியிருக்கிற ஹரிஜனங்களை அப்புறப்படுத்தாமல் அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவைகளை அவர்களுக்குக் கொடுப்பதில் என்ன தடை? ஏன் பட்டா செய்துகொள்ளக்கூடிய உரிமையை அவர்களுக்கு வழங்கக்கூடாது?

The Hon. Sri M. A. Manickavelu : ஹரிஜன மக்களுடைய நிலமாக இருந்து அதில் ஜாதி ஹிந்துக்கள் அனுபவித்து வந்தால் அவர்களிடத்திலிருந்து அதை வாங்கி அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படும். அப்படி இல்லாது வேறு நிலமாக இருந்தால், அது அரசாங்க புறம்போக்கு நிலமாக இருந்தால், அதையும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

Sri S. M. Annamalai : சில புறம்போக்கு நிலங்களை மாற்றுவதாக இருந்தால் அந்த ஊர் பஞ்சாயத்து போர்ட் தீர்மானம் போட்டு பாஸ் செய்து தரவேண்டும். அதற்குப் பிறகு கலெக்டருக்கு அனுப்பி நிலம் மாற்றிய பிறகுதான் அங்கே குடியிருப்புக்கு பட்டா தரவேண்டும் என்ற விதி இருக்கிறது. அங்கே பஞ்சாயத்து தலைவராக இருப்பவர்கள் அத்தனை பேரும் ஜாதி ஹிந்துக்களாக இருப்பதால் ஹரிஜனங்களுக்கு சீக்கிரத்தில் நிலம் கிடைக்காமல் இருக்கிறது. அதனால் அந்த விதிகளைத் தளர்த்தி புறம்போக்கு நிலத்தை மாற்றுவதாக இருந்தால் அந்த அதிகாரத்தை கலெக்டருக்குக் கொடுக்காமல் அங்குள்ள தாசில்தாருக்கே கொடுத்து விடவேண்டும். மற்றும் பஞ்சாயத்து தீர்மானம் போடாமல் சர்க்காரே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் அளவில் விதியை மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா?

The Hon. Sri M. A. Manickavelu : பஞ்சாயத்து தீர்மானம் போடவேண்டும் என்று சொல்வது நடைமுறையில் நடக்கிற சடங்கு. அந்தச் சடங்கின் பிரகாரம் அவர்கள் செய்கிறார்கள். அவர்கள் எழுதிய பிறகு நியாயமாக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்படி உத்தரவு போடப்படுகிறது.

Road for Machampattu

* 321 *Q.*—**Sri N. Marudachalam** (on behalf of **Sri V.K. Kothandaraman**) : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலுகாவிலுள்ள மாச்சம்பட்டு கிராமத்திற்கு ரோடு போடும் திட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன?